**சுருக்கம்**

பொதுப்பணிகள் – நில அளவைப் பதிவேடுகள் துறை – நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகம் – செல்வி.சோ.ஜெயஸ்ரீ, த/பெ. காலஞ்சென்ற திரு.எல்.சோமசுந்தரம் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பணிகள் அலகு, பணி–9(1) பிரிவு**

அரசாணை (3டி) எண்.76

நாள் 18. 05.2023.
சோபகிருது வருடம், வைகாசி–04,
திருவள்ளுவராண்டு 2054.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரின் கடித எண். ந.க.ர1/26391/2022, நாள் 15.10.2022.

******

**ஆணை:–**

சென்னை நில அளவை மற்றும் நிலவரித்திட்ட மத்திய நில அளவை பிரிவில் முதுநிலை வரைவாளராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போது 30.12.2020 அன்று காலஞ்சென்ற திரு.எல்.சோமசுந்தரம் என்பவரின் மனைவி திருமதி.மீனாகுமாரி என்பவர் தனது மகள் செல்வி.சோ.ஜெயஸ்ரீ என்பவருக்கு கருணை அடிப்படையில், பணிநியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். நில அளவைப் பதிவேடுகள் துறையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகத்தில் நில அளவைப் பிரிவில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டு, தனியர் 07.04.2022 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், செல்வி.சோ.ஜெயஸ்ரீ என்பவரை நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகத்தில் நில அளவைப் பிரிவில், 07.04.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வேண்டி நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

//த.பி.பா//

2. நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் பரிந்துரையை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகத்தில் நில அளவைப் பிரிவில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகப் பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி.சோ.ஜெயஸ்ரீ என்பவரை இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 07.04.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.2129/க்யூ2/2023-1, நாள் 27.03.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4416888/ஜி2/2023-1, நாள் 10.05.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**குமார் ஜயந்த்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**

நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர்,
சேப்பாக்கம், சென்னை-5.
செல்வி.சோ.ஜெயஸ்ரீ, இளநிலை உதவியாளர்.
(நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் மூலமாக)

**நகல்**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

18/5/2023
**பிரிவு அலுவலர்.**